JUDICIAL FORM NO.53

{See Rule-42}

DEPOSITION OF WITNESS

(CHATPTER XXIII CRPC).

IN THE COURT OF JUDICIAL MAGISTRATE COURT, TENKASI.

| | | |
|---|---|---|
| Calendar | } | |
| Miscellaneous | } | Case No : - CC// 200 /2017 |
| | : | Prosecution P.W - 3 |
| NAME | : | கென்னடி |
| FATHER'S NAME | : | |
| VILLAGE | : | |
| TALUK | : | |
| CASTE | : | |
| CALLING | : | |
| RELIGION | : | |
| AGE | : | |

Solemnly affirmed in accordance with the provision of the oaths Act,1969 (Central 11/2023Act 44 of 1969) on the Tuesday of 10.01.2023

**முதல் விசாரணை**

நான் தற்போது குறும்பலாபேரியில் குடியிருந்து வருகிறேன். நான் விவசாயம் செய்து வருகிறேன். எதிரிகள் ஜான் பிரிட்டோ மற்றும் பிரேமா ஆகியோர்களை தெரியும். சாட்சி டென்னிசனை எனக்கு தெரியாது. என்னிடம் காட்டப்படும் எதிரிகள் ஜான் பிரிட்டோ மற்றும் பிரேமா கொடுத்த ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். என்னிடம் காட்டப்படும் அத்தாட்சிகளில் உள்ள இரண்டாவது கையொப்பம் என்னுடையது தான். 2017 ம் வருடம் 4 வது மாதம் ஒரு புதன் கிழமையில் நான் ரயில்வே நிலையத்தில் அருகே நின்று கொண்ருந்த போது அப்போது எதிரி பிரேமாவிடம் இருந்து ஒரு துணி கடை பையில் இருந்து சுமார் ரூ 2,60,000 க்கும்மேல் இருந்ததை போலிசார் கைப்பற்றினார்கள். எதிரிகள் ஒப்பு கொண்டு ஒரு ஒப்புதல் வாக்குமூலம் கொடுத்தார்கள். அதன் பேரில் அந்த பணத்தை கொடுத்தார்கள். மீதி பணம்

ஜான்பிரிட்டோவிடம் இருக்கிறது என்று பிரேமா சொன்னார். பிரேமா நகை வாங்க ஜான் பிரிட்டோவை எ திர்பார்த்து இருப்பதாக சொல்லவும் கொஞ்ச நேரத்தில் ஜான் பிரிட்டோவும்வந்து விட்டார். ஜான் பிரிட்டோவை விசாரிக்க ஒப்பு கொண்டு ரூ 3 லட்சத்தை எடுத்து கொடுத்தார். போலிசார் அதை பெற்று கொண்டார்கள். நான் சாட்சியாக இருந்து கையொப்பம் செய்தேன். பிரேமாவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 6 ஆகவும், ஜான் பிரிட்டோவின் ஒப்புதல் வாக்குமூலத்தில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 7 ஆகவும், பிரேமாவிடம் இருந்து பணத்தை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 8 ஆகவும், ஜான் பிரிட்டோவிடம் இருந்து பணத்தை கைப்பற்றியதற்கான அத்தாட்சியில் உள்ள இரண்டாவது கையொப்பம் அசாஆ 9 ஆகவும், குறியிடு செய்யப்படுகிறது. இது சம்பந்தமாக போலிசார் என்னை விசாரித்தார்கள்.

எதிரிகள் தரப்பில் குவி செய்ய வாய்ப்பு வழங்கப்பட்டு குவி செய்யப்படவில்லை.

//Sd// - கென்னடி

Typed down to my dictation in my presence and hearing and under my personal direction and superintendence and interpreted to the witness in the presence of the accused and admitted by the witness to be correct.

//Sd//- Tr.M.Ponpandi
Judicial Magistrate,
Tenkasi